இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 03 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 27 – திங்கள்கிழமை 12 ஆகஸ்டு 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 03 : Thiruvalluvar Year - 2055 - Aadi 27 - Monday 12 August 2024 - Chennai 12 Pages ₹ 5.00

## திருவண்ணாமலை - நாமக்கல் - புதுக்கோட்டை - காரைக்குடி ஆகிய

# 4 புதிய மாநகராட்சிகள் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

## ரூ.800.75 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகள் – ரூ.1192.45 கோடியில் புதிய திட்டப்பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழா!

**சென்னை, ஆக.12-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று காலை காணொலிக் காட்சி மூலமாக நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.800.75 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும், ரூ.1192.45 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் திருவண்ணாமலை, நாமக்கல், புதுக்கோட்டை, காரைக்குடி ஆகிய 4 புதிய மாநகராட்சிகளைத் தொடங்கி வைத்தும் சிறப்பிக்கிறார்.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

வரலாற்றுத் தலைநகரமாக விளங்கிய புதுக்கோட்டை, கோயில் நகரமான திருவண்ணாமலை, தொழில் நகரமான நாமக்கல், கல்வி நகரமான காரைக்குடி போன்ற நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரம் உயர்த்த வேண்டுமென பெறப்பட்ட கோரிக்கைகளை ஏற்று அந்நகரங்களையும், அவற்றின் அருகாமையில் அமைந்துள்ள விரைந்து நகரமயமாகி வரும் பேரூராட்சிகள், ஊராட்சிகள் போன்ற உள்ளாட்சி அமைப்புகளையும் ஒன்றிணைத்து புதிய மாநகராட்சிகள் உருவாக்கப்படும் என நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்,நேரு சட்டப் பேரவையில் 30.03.2023 அன்று அறிவித்தார்.

**நடைமுறைகளைத் தொடங்கிட முதல்வர் உத்தரவு!**

இந்த அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பான உரிய பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், 4 புதிய மாநகராட்சிகளை



அமைத்துருவாக்குதற்கான நடைமுறைகளை தொடங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

இதன்படி, புதுக்கோட்டை நகராட்சி மற்றும் 11 ஊராட்சிகளை ஒன்றிணைத்து புதுக்கோட்டை மாநகராட்சி; திருவண்ணாமலை நகராட்சி மற்றும் 18 ஊராட்சிகள், அடி அண்ணாமலையிலுள்ள பகுதிகள் ஆகியவற்றை ஒன்றிணைத்து திருவண்ணாமலை மாநகராட்சி; நாமக்கல் நகராட்சி மற்றும் 12 ஊராட்சிகளை ஒன்றிணைத்து நாமக்கல் மாநகராட்சி; காரைக்குடி நகராட்சி மற்றும் இரண்டு பேரூராட்சிகள், ஐந்து ஊராட்சிகளை ஒன்றிணைத்து காரைக்குடி மாநகராட்சி, என மொத்தம் 4 புதிய மாநகராட்சிகளை உருவாக்குவது தொடர்பான அரசின் உத்தேச முடிவினை அறிவித்து 15.3.2024 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. 1998ஆம் ஆண்டு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் படியான உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு புதிய மாநகராட்சிகள் அமைத்துருவாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், புதுக்கோட்டை, நாமக்கல், திருவண்ணாமலை, காரைக்குடி ஆகிய நகராட்சிகள் மற்றும் அதன் அருகாமையில் அமைந்துள்ள உள்ளாட்சி பகுதிகளில் சாலைகள், பாதாள சாக்கடை, மழைநீர் வடிகால் உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேலும் சிறப்பாக ஏற்படுத்தவும் மற்றும் இப்பகுதியில் வசிக்கும் மக்கள், பல்வேறு தேவைகளுக்காக இப்பகுதிகளுக்கு வந்து செல்வோர், சுற்றுலாப் பயணிகள், வணிக நிறுவனங்கள், தொழில் துறையினர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் வாழ்க்கைத்தரம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்படவும் வாய்ப்பாகவும் அமையும்" என்று முதல்வர் அவர்கள் தெரிவித்திருந்தார்.

**முதல்வர் இன்று தொடங்கி வைக்கிறார்!**

இந்நிலையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.800.75 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும், ரூ.1192.45 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் திருவண்ணாமலை, நாமக்கல், புதுக்கோட்டை, காரைக்குடி ஆகிய 4 புதிய மாநகராட்சிகளையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று (12.08.2024 திங்கட்கிழமை) காலை 11 மணிக்கு காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கிவைத்து சிறப்பிக்கிறார்.

**பணி நியமன ஆணைகள்!**

மேலும் பல்வேறு துறைகளில் 144 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் மற்றும் 27 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை வழங்கி, புதிய வாகனங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்தும் தொடங்கி வைத்தும் சிறப்பிக்கிறார்.

> **“பெசன்ட் நகர் கடற்கரையில் மாற்றுத் திறனாளிகளுக்கான நடைபாதை, ஏரி மற்றும் கால்வாய் சீரமைப்பு, தூய்மைப் பணியாளர்கள் குடியிருப்பு, ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள், புதிய அலுவலகக் கட்டடங்கள், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், அறிவுசார் மையங்கள், பொது கழிப்பிடங்கள், புதிய குடிநீர்த் திட்டப்பணிகள் பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், யானைக்கவுணி இரயில்வே மேம்பாலம், நவீன மீன் அங்காடிகள் திறப்பு!”**

இவ்விழாவிற்கு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

**புதிய பூங்காக்கள் - விளையாட்டு மைதானங்கள்!**

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம், பேரூராட்சிகளின் இயக்குநரகம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகராட்சி நிருவாக இயக்குநரகம் சார்பில் புவியிடஞ் சார்ந்த தகவல் அமைப்பு மேலாண்மை மையம், புதிய பூங்காக்கள், புதிய விளையாட்டு மைதானங்கள், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், புதிய வணிக வளாகங்கள், புதிய பேருந்து நிலையங்கள், புதிய அங்கன்வாடி மையங்கள், கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், சாலைப் பணிகள், புதிய வகுப்பறைகள், புதிய நீர்தேக்கத் தொட்டி, சுரங்கப்பாதை, புதிய பாலங்கள், ஆகாய நடைபாதை மற்றும் பெசன்ட் நகர் கடற்கரையில் மாற்றுத் திறனாளிகளுக்கான நடைபாதை, ஏரி மற்றும் கால்வாய் சீரமைப்பு, தூய்மைப் பணியாளர்கள் குடியிருப்பு, ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள், புதிய அலுவலகக் கட்டடங்கள், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், அறிவுசார் மையங்கள், பொது கழிப்பிடங்கள், புதிய குடிநீர்த் திட்டப்பணிகள் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், யானைக்கவுணி இரயில்வே மேம்பாலம், நவீன மீன் அங்காடி உள்ளிட்ட 104 முடிவுற்ற புதிய திட்டப் பணிகள் தொடக்கவிழா, 39 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவிழா மற்றும் 66 புதிய வாகனங்கள் வழங்கப்படவிருக்கிறது என்று நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

---

### அதானி நிறுவனத்துடன் ‘செபி’ அமைப்பின் தலைவருக்குத் தொடர்பு!

# நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிடுக!

## காங்கிரஸ் – மார்க்சிஸ்ட் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 12 -

அதானி நிறுவனத்துடன் செபி தலைவருக்கு உள்ள தொடர்புகள் குறித்து நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என காங்கிரஸ் வலியுறுத்தி உள்ளது.

அதானி குழுமத்தின் நிதி முறைகேடுகளுடன் தொடர்புடைய வெளிநாட்டு நிறுவனங்களில் செபி தலைவர் மதாபி புச் மற்றும் அவரது கணவர் தவல் புச் ஆகியோர் பங்குகளை வைத்துள்ளதாக அமெரிக்க நிதி ஆய்வு நிறுவனமான ஹிண்டன்பெர்க் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்தியா இன்ஃபோலைனின் ‘இ.எம். ரீசர்ஜண்ட் ஃபண்ட் மற்றும் இந்தியா ஃபோக்கஸ் ஃபண்ட்’ நிறுவனம் மூலம் இயக்கப்படும் அதானியின் சந்தேகத்திற்குரிய மற்ற பங்குதாரர் நிறுவனங்களுக்கு எதிராக செபி இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

செபி தலைவர் தனிப்பட்ட ஆதாயத்திற்காக இவ்வாறு செயல்பட்டுள்ளதால், செபியின் வெளிப்படைத்தன்மை கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும், அதானி குழுமத்தின் பங்குச்சந்தை முறைகேடுகள் குறித்த செபியின் விசாரணையில் துளியளவும் நம்பிக்கையில்லை என்றும் ஹிண்டன்பர்க் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அதானி நிறுவனத்துடன் செபி தலைவருக்கு உள்ள தொடர்புகள் குறித்து நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என காங்கிரஸ் வலியுறுத்தி உள்ளது.

இது குறித்து எக்ஸ் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ்,

அதானி குழுமத்தின் மெகா ஊழலில் பல உயர் அதிகாரிகளுக்கு0 தொடர்பு உள்ளது அம்பலமாகி உள்ளதால், அதானி பங்குச் சந்தை முறைகேடுகள் குறித்த செபி விசாரணையில் உள்ள அனைத்து முரண்பாடுகளையும் நீக்க ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார். அதானி பங்குச்சந்தை முறைகேடுகள் குறித்த உண்மைகள் வெளிவர நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணையே தீர்வாக அமையும் என தொடக்கம் முதலே காங்கிரஸ் வலியுறுத்தி வருகிறது’ என்று ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி வலியுறுத்தல்

அதானி பங்குச்சந்தை முறைகேட்டில் தொடர்புடைய செபி தலைவர் மதாபி புச் ராஜினாமா செய்ய வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி வலியுறுத்தி உள்ளார். அதானி பங்குச் சந்தை மோசடி குறித்து விசாரிக்க நாடாளுமன்ற கூட்டுக் குழுவை அமைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

### இலங்கைக் கடற்படையின் தாக்குதலை கண்டிக்காமல்

# ஒன்றிய அரசு வேடிக்கை பார்க்கிறது!

## மீனவ அமைப்புகள் குற்றச்சாட்டு! - ராமேஸ்வரம் மீனவர்கள் வேலைநிறுத்தம்!

இராமேஸ்வரம், ஆக.12-

இலங்கை கடற்படையின் தாக்குதலை தடுத்து நிறுத்தாமல் வேடிக்கை பார்க்கும் ஒன்றிய அரசை கண்டித்து ராமேஸ்வரத்தில் மீனவர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினரின் தாக்குதல் சம்பவம் தொடர் கதையாகி வருகிறது. கச்சத்தீவு அருகே மீன்பிடிக்கும் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது கற்களை வீசி, இலங்கை கடற்படையினர் விரட்டியடித்தனர். பாம்பனில் இருந்து நாட்டுப்படகில் மீன்பிடிக்க சென்ற 35 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். இந்நிலையில், இலங்கை கடற்படையின் தாக்குதலை தடுத்து நிறுத்தாமல் வேடிக்கை பார்க்கும் ஒன்றிய அரசை கண்டித்து ராமேஸ்வரத்தில் மீனவர்கள் நேற்று முன்தினம் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

இதனால் பாம்பன் துறைமுகத்தில் 500க்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகள் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. மீனவர்கள் விவகாரத்தில் இலங்கை அரசுக்கு ஒன்றிய அரசு அழுத்தம் தர வேண்டும் என்றும் மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

---

# மேட்டூர் அணைக்கு வரும் நீர்வரத்து 20,505 கன அடியாக அதிகரிப்பு!

சேலம், ஆக. 12 -

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன்படி மேட்டூர் அணைக்கான நீர்வரத்து இன்று வினாடிக்கு 6,548 கன அடியில் இருந்து 20,505 கன அடியாக உயர்ந்துள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 119.24 அடியில் இருந்து 119.65 அடியாக அதிகரித்துள்ளது. அணையில் தற்போது 92.91 டி.எம்.சி. அளவு நீர் இருப்பு உள்ளது.

பாசன தேவைக்காக மேட்டூர் அணையில் இருந்து 12,000 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.